மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
வத்திராயிருப்பு

**அசல் வழக்கு எண். 37/2024**

பி. வா.சா.1 – மாரியம்மாள், W/o. கதிரேசன்
நாள்: 09.03.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

**1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

வாதியும் இறந்து போன கதிரேசன் என்பவருக்கு சட்டப்படியான வாரிசு என்று விளம்புகை செய்ய கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய கணவர் உயிருடன் இருந்த காலத்தில், திருவில்லிபுத்தூர் மாண்புமிகு மாவட்ட நீதிமன்றத்தில் இந்த வழக்கின் வாதி இளவராக இருந்த சமயத்தில், அவருக்கு பாதுகாவலராக நியமனம் செய்ய கேட்டு GWOP 02/1993 என்ற வழக்கு தாக்கல் செய்து, அதில் எனது கணவரை வாதிக்கு காவலராக நியமனம் செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்று சொன்னால் அது குறித்து எனக்கு எதுவும் தெரியாது. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துவிட்டு அதற்கு விரோதமாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் இந்து மதத்தை சார்ந்தவரா அல்லது கிறிஸ்தவ மதத்தை சார்ந்தவரா என்றால் இரண்டு மதத்தையும் சார்ந்து வாழ்ந்து வருகிறேன். எனது கணவருக்கு செய்ய வேண்டிய இறுதி ஈமச்சடங்குகளை வாதி தான் செய்தார் என்று சொன்னால் சரியல்ல நான் தான் செய்தேன்.

இந்து சமயத்தில் பொதுவாக பெண்களை மயானத்திற்கு செல்லும் பொழுது குறிப்பிட்ட தூரம் வரை தான் செல்ல அனுமதிப்பார்கள் என்று சொன்னால் சரிதான். எனது கணவருக்கு செய்ய வேண்டிய இறுதி ஈமச்சடங்குகளை செய்ததாக நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில்

சொல்லப்படவில்லை என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. எனது கணவரின் பெயரில் சொத்துக்கள் உள்ளது என்று சொன்னால் சரிதான். எனது கணவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் முறைப்படி மரபு வழிப்படி சுவிகாரம் எடுத்துவிட்டு, தற்பொழுது சொத்துக்கள் அவருக்கு சென்று விடக்கூடாது என்பதற்காக, எனது கணவருக்கு நான் மட்டும்தான் வாரிசு என்று கட்சி செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னுடைய மாமனார் பெயர் முத்தையா நாடார் என்றால் சரிதான். என்னுடைய மாமனாருக்கு மொத்தம் எத்தனை வாரிசுகள் என்றால் 3 ஆண் மற்றும் 2 பெண் வாரிசுகள். என்னுடைய கணவர் பெயர் கதிரேசன் என்றால் சரிதான். எனது கணவரின் தம்பி பெயர் நாகராஜன் என்றால் சரிதான். மற்றொரு தம்பியின் பெயர் காளீஸ்வரன். இந்த வழக்கின் வாதி நாகராஜன் என்பவரின் மகன் என்று சொன்னால் சரிதான். நாகராஜன் என்பவரின் மனைவி பெயர் கணேஷ்வரி என்றால் சரிதான். வாதியின் தாயார் 1984 வது வருடத்தில் இறந்து விட்டார் என்று சொன்னால் சரிதான். வாதியின் தகப்பனார் 1985 வது வருடத்தில் இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான்.

வாதியின் பெற்றோர்கள் காலம் சென்ற பிறகு அவரை நானும் எனது கணவரும் தான் பராமரித்து வந்தோம் என்று சொன்னால் சரியல்ல. அவருக்கென்று அத்தை, மாமா, தாத்தா மற்றும் பாட்டி என எல்லோரும் இருந்தார்கள். எல்லோருமே சேர்ந்துதான் அவரை வளர்த்தோம். எனது கணவர் திருவில்லிபுத்தூர் மாண்புமிகு மாவட்ட நீதிமன்றத்தில் GWOP No. 2/1993 என்ற வழக்கு தாக்கல் செய்தார் என்று சொன்னால் அது குறித்து எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்டுள்ள முத்தையா நாடார் மகன் கதிரேசன் என்பவர் என்னுடைய கணவர் என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணம், எனது கணவர் வாதி கார்த்திக் என்பவர் மீது தாக்கல் செய்த வழக்கில் பிறப்பித்த உத்தரவின் நகல் என்றும், அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துவிட்டு தற்பொழுது எனக்கு அது குறித்து தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

வாதி தாக்கல் செய்த வழக்குக்கு எதிர் வழக்குரை தாக்கல் செய்ய வழக்கறிஞருக்கு நான் தான் தகவல் தெரிவித்தேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் எனது கணவர் வாதிக்கு எதிராக மாண்புமிகு மாவட்ட நீதிமன்றத்தில் GWOP No. 2/1993 என்று வழக்கு தாக்கல் செய்து, நீதிமன்றம் மூலம் வாதிக்கு பாதுகாவலர் என்ற உத்தரவை பெற்ற விவரம் சரி என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் வாதிக்கு எனது கணவர் தான் சட்டபூர்வ பாதுகாவலர் என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது. எனது கணவர் மேற்படி மாண்புமிகு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் வாதியை தட்டெடுப்பதற்கு விருப்பமாக உள்ளதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளார் என்று சொன்னால் அது குறித்து எனக்கு எதுவும் தெரியாது. 1993 வது வருடத்தில் நானும் எனது கணவரும் சேர்ந்து, வாதியை ஊர் பெரியவர்கள் முன்னிலையில் தத்தெடுத்து வளர்த்து வந்தோம் என்று சொன்னால் சரியல்ல.

வாதியை நானும் எனது கணவரும் தத்தெடுத்த நாள் முதல் அவரை சுவிகார புத்திரனாக வளர்த்து வந்தோம் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் 22.06.2014 அன்று காலம் சென்று விட்டார் என்று சொன்னால் சரிதான். எனக்கு, எனது கணவருக்கும் குழந்தைகள் கிடையாது என்று சொன்னால் சரிதான். எனக்கும், எனது கணவருக்கும் குழந்தை இல்லாத காரணத்தினால் எனது கணவரின் தம்பியின் மகனை சுவிகார புத்திரனாக அடைந்து, நீதிமன்றம் மூலம் அவருக்கு பாதுகாவலராக உத்தரவு பெற்றுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில், வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை எனது கணவர் கைப்பற்றி, அவைகளை பரிபாலனம் செய்து, 6 மாதத்துக்கு ஒருமுறை நீதிமன்றத்தில் எனது கணவர் கணக்குகளை ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்ட விபரம் தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேலும் அதே உத்தரவில், வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் இருந்து வரும் வருமானத்தை வாதியின் பராமரிப்பு செலவு போக மீதி பணத்தை 6 மாதங்களுக்கு ஒரு முறை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது குறித்து எனக்கு தெரியாது.

மேலும் நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் எனது கணவர் நீதிமன்றம் விதித்த விதிகளின்படி நடந்து கொள்ளவில்லை என்று சொல்லி உள்ளேன் என்று சொன்னால் நான் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை. மேலும் அதே எதிர்வழக்குரையில், எனது கணவர் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை விற்பனை செய்து கணக்குகளை ஒப்படைக்காமல் வாதியை ஏமாற்றி விட்டதாக நான் சொல்லுவேன் என்று சொன்னால் நான் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை. எனது கணவர் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பாதுகாவலர் என்ற முறையில் விற்பனை செய்து விட்டார் என்று சொன்னால் விற்பனை செய்தது உண்மைதான். எனது கணவரும், எனது கணவரின் தம்பி காளீஸ்வரன் என்பவரும் கடந்த 1999 வது வருடத்தில் சின்ன கருப்பையா என்பவருக்கு ஒரு கிரையம் எழுதிக் கொடுத்தார்கள் என்று சொன்னால் சரிதான். ஆனால் யார் எழுதி கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. எனது கணவரும், எனது கணவரின் தம்பியும் சொத்தை விற்பனை செய்வது சம்பந்தமாக வீட்டில் வைத்து பேசிய விபரம் எனக்கு தெரியும். மேற்படி கிரைய பத்திரத்தில் எனது கணவர் வாதியை சுவிகார புத்திரன் என்றுக் காட்டி ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார் என்று சொன்னால் அது குறித்து எனக்கு எதுவும் தெரியாது.

நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில், வாதியை மற்றவர்களும் பராமரித்து வந்ததாக சொல்லல்ல விபரங்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. 24.07.2016 அன்று பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பேசி ஏற்படுத்திக் கொண்டதாக சொல்லக்கூடிய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் தாக்கல் செய்யவில்லை. இனி தான் தாக்கல் செய்ய வேண்டும். வாதி என்னிடம் ரூ. 5,00,000/- வாங்கியதாக சொல்வது பொய் என்றும், நானும் எனது கணவரும் வாதியை ஏமாற்றி வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. வாதி கார்த்திக் மீது வத்திராயிருப்பு காவல் நிலையத்தில்என்னால் புகார் கொடுக்கப்பட்டு தற்பொழுது அந்த வழக்கானது திருவில்லிபுத்தூர் மகளிர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் முதல் தகவல் அறிக்கை மற்றும் அதனோடு இணைக்கப்பட்ட சாட்சிகளின் வாக்குமூலங்கள், என்னால் கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை மற்றும் சாட்சிகளை விசாரணை செய்து பதிவு செய்த வாக்குமூலங்கள் என்று சொன்னால் சரிதான்.

மேற்படி நான் கொடுத்த புகார் மனுவில், என்னுடைய மாமாவிற்கு வயதாகின்ற காரணத்தினால் அவரால் குழந்தையை பராமரிக்க முடியாது என்கின்ற காரணத்தினாலும், எங்களுக்கு குழந்தை இல்லை என்கின்ற காரணத்தினாலும், கார்த்திக்யையும், என் கொழுந்தன் பெயரிலுள்ள சொத்துக்களையும், நாங்களே பராமரித்துக் கொள்கிறோம் என்றும், நீதிமன்றம் மூலம் கார்த்திக்கை தத்தெடுத்து அன்று முதல் எங்களுடைய மகனாக வளர்த்து வந்தோம் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை. நானும், எனது கணவரும் வாதியை 1993 வது வருடத்திலேயே சுவிகார புத்திரனாக தத்தெடுத்து வளர்த்து வந்தோம் என்றும், தற்பொழுது வாதிக்கு சொத்துக்கள் கிடைக்கக் கூடாது என்கின்ற காரணத்தினால் வாதி எங்களுடைய சுவிகார புத்திரன் இல்லை என்று பொய்யாக சொல்லி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நானும் எனது கணவரும் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை விற்பனை செய்து பராதீனம் செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. எனது மாமனாரிடம் இருந்து எனது கணவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் தற்பொழுது வரை எங்களால் விற்பனை செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி எனக்கு சுவிகார புத்திரன் என்றும், மேற்படி விபரத்தை மறைத்து நான் பெற்ற வாரிசு சான்றிதழ் சட்டப்படி செல்லக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நானும், எனது கணவரும் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அபகரித்ததோடு மட்டுமல்லாமல், தற்பொழுது அவரை வாரிசு இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் 2 வது பிரதிவாதியிடமிருந்து பெற்ற வாரிசு சான்றிதழ் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. வாதி கேட்டுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்க கூடியது என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/–எம்.இராமநாதன்/–
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு